# பத்திரிக்கைச் செய்தி

அரியலூர் மாவட்டத்தில் தமிழ்நாடு அரசின் ஓய்வூதியம் மற்றும் குடும்ப ஓய்வூதியம் பெறுவோருக்கான மாதாந்திர குறைதீர் கூட்டம் அரியலூர் மாவட்ட கருவூல அலுவலர் தலைமையில் 28.06.2019 அன்று காலை 10.30 மணிக்கு நடைபெறவுள்ளது.

ஓய்வூதியர்கள் அரியலூர் மாவட்ட கருவூலம் மற்றும் சார்நிலை கருவூலங்களில் நிலுவையில் உள்ள குடும்ப ஓய்வூதியம், வாழ்நாள் நிலுவை, கூடுதல் ஓய்வூதியம், திருந்திய ஓய்வூதியம் போன்ற தங்களது குறைகளை தெளிவாக குறிப்பிட்டு மாதாந்திர ஓய்வூதியர்கள் குறைதீர்க்கும் கூட்ட விண்ணப்பம் என தலைப்பிட்டு மாவட்ட கருவூல அலுவலர், அரியலூர் என்ற முகவரிக்கு 24.06.2019-க்குள் அனுப்பிவைக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறது.

அரியலூர் மாவட்ட கருவூல அலுவலரின் அதிகார வரம்பிற்கு உட்பட்ட அனைத்து விண்ணப்பங்கள் மீதும் உடனடி நடவடிக்கை எடுத்து உரிய ஆணைகள் மற்றும் நிலுவைத் தொகை வழங்கப்படும். மேலும், கூட்டத்தின்போது, ஓய்வூதிய விவரங்களை புத்தகத்தில் பதிவு செய்தல், நாமினேஷன் தாக்கல் செய்தல், வருமானவரி படிவம் (Form 16) வழங்குதல், புதிய மருந்துவ காப்பீடு அடையாள அட்டைக்கான விண்ணப்பங்கள் பெறுதல் போன்ற சேவைகளையும் பெற்றுக்கொள்ளலாம் என அரியலூர் மாவட்ட கருவூல அலுவலர் **திரு.எஸ்.நடராஜன்** அவர்கள் தெரிவித்துள்ளார்.